1995 நவம்பர் 10]

மக்களைப் படைத்தோம்; மக்களே ஆக்கிரமிப்புச் செய்யும்போது, நாம் ஏன் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது' என்று அவர்களும் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டுள்ளார்கள். அவ்வாறு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள இடங்கள் 25 சென்ட். அதுமட்டும் போதாது என்று, அவர்கள் குடியிருக்கிற இடம் மட்டும் போதாது என்று சுற்றிலும் அவர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். அவ்வாறு 4 ஏக்கர் 81 சென்ட் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். அவர்களுடைய தேவையையும் பார்த்து, அவர்களுடைய ஆக்கிரமிப்பை அகற்றுவதா அல்லது விட்டுவிடுவதா என்று அதையும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால், விநாயகர், ஐயப்பன், முருகனுக்கு ஏதாவது கொடுக்கலாமா என்று அரசு யோசித்து அதையும் கொடுத்துவிட்டு, மீதி உள்ளவைகளை எல்லாம் இவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு எல்லாவிதமாக நடவடிக்கையும் எடுக்கும்.

முற்பகல் 10-10

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் இல்லாத ஊரில் குடியிருக்கக்கூடாது என்று சொல்லுவார்கள். ஆலயம் தொழுவது சாலவும் சிறந்தது. ஆகவே, இந்தப் பகுதியிலே 2 கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவிலைச் சேர்ந்தவர்கள் தடை ஆணை பெற்று இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுக்கும் பட்டா வழங்கி, இங்கே புறம்போக்கிலே வீடு கட்டி இருக்கிற மக்களுக்கும் பட்டா வழங்குவதற்கு விரைவிலே ஆவன செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள்; அதற்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, எப்போது இந்த பட்டா வழங்குவதற்கு முயற்சிகள் நடைபெறும் என்பதை உங்கள் மூலம் பணிவாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகளால் நீதிமன்றத்திலே அந்த வழக்கை விரைவிலே முடிப்பதற்கோ அல்லது தடை ஆணையைத் தள்ளுவதற்கோ ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. தீர்ப்பு வந்தவுடன் நிச்சயமாக கவனிக்கப்படும்; பட்டா கொடுக்கப்படாவிட்டாலும், அந்த போயர்கள் குடி இருக்கிற இடத்திலிருந்து அகற்றப்படமாட்டார்கள் என்பதை இந்த அவையின் மூலமாக நான் உறுதியளிக்கிறேன்.

[*1995 நவம்பர் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் 84, டாக்டர் அ. ஸ்ரீதரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

84—

சின்கோனா மருத்துவமனையை டான்டீயிடம் ஒப்படைத்தல்

**21453—டாக்டர் அ. ஸ்ரீதரன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு சின்கோனா மருத்துவமனையை டான்டீயிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சின்கோனா மருத்துவமனையை தேயிலை பயிரிடும் வாரியத்திடம் ஒப்படைக்க 19-9-94-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சின்கோனா மருத்துவமனை, அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வந்தது. அங்கு தேயிலை பயிரிடும் டான்டீ நிறுவனத்திடம் ஒப்படைத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த டான்டீ நிறுவனத்தில் அதிகமாக தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள். அங்கு மலைவாழ் மக்கள் வேலை செய்கின்ற காரணத்தினால், டான்டீ நிறுவனம் பண்ணுவதுதான் சரியாக இருக்கும் என்ற காரணத்தினால், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு அந்த மருத்துவமனையை ஒப்படைத்து இருப்பதாக அறிகிறேன். ஆகவே, இதேபோல மற்ற மலைப் பகுதிகளில் இருக்கிற அரசு மருத்துவமனைகளும் டான்டீ நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.